# எட்டுத்தொகையில் அரசமைப்பு

# Constitution in Ettuthogai

***முனைவர் தி. அமர்ராஜ்***
ஆராய்ச்சியாளர், சிதம்பரம், இந்தியா

**Dr. T. Amarraj**
*Researcher, Chidambaram, India*

**Citation**: Amarraj, T. "Constitution in Ettuthogai." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 3, 2025, pp. 1-6.
**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20053718*

### *ஆய்வுச் சுருக்கம்*
*சங்க காலத்தில் அரசனின் ஆணையைச் செயல்படுத்துவதற்குப் பல அதிகாரிகள் இருந்தது போல் அமைச்சர்களும் இருந்தனர். இவர்களின் பணி அரசனுக்கு ஆட்சி முறையில் ஏற்படும் ஐயங்களுக்கு ஆலோசனை வழங்குதலாகும். அரசன் நெறி தவறி நடக்கும் சூழல் உருவாகும் பொழுது அவனைத் திருத்த வேண்டியவர்களாகவும் இருந்தனர். அரசியலமைப்பில் அரசனுக்கு அடுத்த அதிகாரங்களைப் பெற்றவர்களாக அமைச்சர்கள் திகழ்ந்தனர். அரசவைப் புலவர்களும், அறிவு சார்ந்த தளங்களில் அறங்களை வலியுறுத்த முயன்ற பொதுநிலைப் புலவர்களும் சங்க இலக்கியம் முழுவதும் பயணப்படுகின்றனர். இப்புலவர்களின் புகழ்ச்சியும், பழிச்சொல்லுமேஆள்வோரின் நல்லாட்சிக்கு அறவழியைக் காட்டியுள்ளன. இவ்வாறு தமிழக நிலவெளியில் ஆட்சிசெலுத்திய சங்ககால அரசர்களும், அக்கால குடிமக்களும், அறிவார்ந்த சான்றோர்களும், தமது பாடல்திறத்தால் வரலாற்றின் நிகழ்வுகளைத் தொகுத்தளித்த சிறந்த புலவர்களும், அரசவை மற்றும் போர்சார்ந்த ஆளுமைகளில் தமது பெயரினை நிலைநிறுத்தியவர்களும், நாடு மற்றும் அரசமைப்போடு தொடர்புடைய பல்வேறு மாந்தர்களும் கடைபிடிக்க வேண்டிய அரசியல் அமைப்பு சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே புலவர்களால் நெறிமுறைகளாக வலியுறுத்தப்பட்டுள்ளன. இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எட்டுத்தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள அரசியல் அமைப்புகளை ஆராய்ந்து எடுத்துரைப்பதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க காலம், எட்டுத்தொகை, நெறிப்படுத்திய ஆட்சி, அரசியல் அமைப்பு, அரசவைப் புலவர்கள்*

### Abstract
*During the Sangam period, just as there were various officials to implement the king's orders, there were also ministers. Their primary duty was to advise the king on governance matters and provide guidance in situations of uncertainty. When the king deviated from righteous governance, it was the ministers' responsibility to correct him. In the political structure, ministers held the highest authority next to the king. Court poets and scholars in the Sangam period played a crucial role in emphasizing ethical governance. Their praises and proverbial sayings served as moral guidelines for rulers to ensure good governance. In this way, the Sangam-era kings who ruled over Tamil lands, the citizens of that time, wise intellectuals, poets who documented historical events through their literary works, and influential figures in royal courts and warfare all contributed to shaping the political framework. The political principles that various individuals were expected to adhere to in governance have been highlighted in different places within Sangam literature through the works of poets. This research paper aims to analyze and explain the political structures reflected in the Ettuthokai literary collection, based on these insights.*

***Keywords****: Sangam-era, Ettuthokai, Ethical Governance, Political Structure, Court Poets*

**அரசியல் சொல்லுருவாக்கம்**

*இந்தியாவில் அரசியல் எனப்படுவதை ராஜ தர்மம் என்று வழங்கினர். தொன்மையான ஸ்மிருதிகள் காலத்திலேயே இச்சொல் வழக்கத்திற்கு வந்துவிட்டது.*[1] *ஆங்கிலம் அரசியலை பாலிடிக்ஸ்*(Polititcs) *என்று வழங்குகிறது. இச்சொல் தொடக்கத்தில் கிரேக்கத்தில் நகர அரசைக்* (City State) *குறித்தது. பிற்காலத்தில் அரசு - அரசாங்கம் போன்ற அனைத்துப் பொருட்களைப் பற்றியும் குறிக்கும் வகையில் ஒரு பரந்த பொருளுடைய சொல்லாகிவிட்டது.*[2]

**அகராதி கூறும் அரசியல் விளக்கம்**

*அரசியல் என்பதற்கு ''இராசரிக முறை'', ''ஆட்சி செய்யும் முறை'', ''அரசாட்சி'', ''அரசநீதி'', ''அதிகாரத்தைக் குறிவைத்துச் செயல்படும் போக்கு'', ''ஆட்சி அதிகாரம் பற்றிய கோட்பாடுகளும் நடைமுறைகளும்'', ''அரசாளும் முறை'', ''நாடு ஒன்றினை ஆட்சி புரிந்திடும் முறை'' ''ஆட்சி புரிவது பற்றிய பல்வேறு கட்சிகளின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்'' ''அதிகாரத்தைப் பயன்படுத்துதல்'', ''தீர்மானம் எடுத்தல்'', ''தகுதியுடையோர் செயல்தகவைப் பங்கீடு செய்தல்'', 'ஆட்சி தொடர்பான தீர்மானங்களைச் செய்தல்', ''மக்கட் சமுதாயமாகிய அரசு என்ற சமுதாய அமைப்பின் பொதுத் தன்மையைப் பற்றிய செய்தித் திரள்', ''மனித சமுதாயத்தினைப் பேணும் முறையே அரசாட்சி'', ''அரசாட்சியின் பண்பினை இயம்புவது அரசியல்*[3] *என்று அகராதிகளும், வாழ்வியற் களஞ்சியமும் பொருளியம்புகின்றன.*

**அரசியல் அறிஞர்களின் விளக்கம்**

*மேலும், ஆள்கின்ற அரச சக்தியும் ஆளப்படுகின்ற பிரஜா சக்தியும் சாசுவதமானவை. இவற்றின் லட்சணங்கள் நியமங்கள், கடமைகள் முதலியவைகளும் சாகவதமானவை. இவற்றில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு ஏதுமில்லை. இவைகளைப் பற்றிப் பொதுவான முறையில் கூறுவதுதான் அரசியல் சாஸ்திரம்*[4] *என்பார் குருசாமி.*

*''அசியல் எதிரிகளை அடக்கி ஒடுக்கி நிலையான எதிரிகளாக வைத்திருப்பது சிறந்த அரசியல் அறிவாகாது. அவர்களை நண்பர்களாகச் செய்துகொண்டு நாட்டு மக்களின் வாழ்வையே சிறந்த குறிக்கோளாகக் கொண்டு ஆட்சி புரிவதுதான் அரசியலாகும்'' என்கிறார் சாமி. சிதம்பரனார். ''மண்ணாசை, பொன்னாசை, புகழாசை தவிர வேறில்லை,'' ''அரசியல் என்பது கீழ்த்தரமான கலை. இதனால் போலித் துறவிகளும் பிராமணர்களும் பிழைப்பு நடத்துகின்றனர்'' அரசியல் என்ற சொல் பொதுவாக ஊர், நகர், மாநிலம், நாடு, உலகம் ஆகியவற்றின் பிரச்சனை பற்றிய அறிவியல்'' என்றும், ''பண்பில் மிகுதியும் பொருளியல் தன்மையும் கொண்ட அரசாங்கத்தின் நடப்புப் பிரச்சனைகளைக் குறிக்கும்'' என்றும் அப்துல் ரகுமான் எடுத்துரைக்கிறார். மேலும் அவர் கூறும்போது. ''அரசியலை அர்த்த சாஸ்திரம் என்று வழங்கலாயினர். அர்த்த சாஸ்திரம் என்பது நிலத்தை அடைவதற்கும் காப்பதற்கும் உரிய முறைகளைக் கூறுவது*[4] *என்கிறார்.*

**சமூக வாழ்வியல்**

*சங்க காலத் தமிழகம் மன்னராட்சியின் கீழ் செயல்பட்டது. ஆட்சி புரிவோர் குறுநில மன்னர்கள். வேந்தர் என இரண்டு வகையாக அழைக்கப்பட்டனர். குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை ஆகிய நான்கு நிலப் பகுதிகளிலும் வாழ்ந்த குறவர், ஆயர், பரவர், மறவர் ஆகிய மக்கட் பிரிவினர் தத்தமக்கென சுயேச்சையான ஆளுவோரைக் கொண்டிருந்தனர். இவர்களையே குறுநில மன்னர்கள் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடும். குறுநில*

*மன்னர்களுக்கும் அவர்களால் ஆளப்படும் மக்களுக்குமிடையே ஆழமான வேறுபாடுகள் நிலவவில்லை. மருதநில அல்லது நெய்தல் நில நகர் ஒன்றினை மையமாகக் கொண்டு பரந்த நிலப்பகுதியை ஆட்சி புரிந்தவர்கள் வேந்தர் எனப்பட்டனர். சேரர், சோழர், பாண்டியர் என மூன்று வேந்தர்கள் மட்டுமே பெருநிலப் பகுதியை ஆண்டனர். வாய்ப்பு நேரிடும் போது குறுநில மன்னர்களின் நிலப் பகுதியையும் தங்களுடன் இணைத்துக் கொண்டனர்.*

*மூவேந்தர்களுக்கு துணைபுரிய 1. அமைச்சர், 2. புரோகிதர், 3. சேனாதிபதி, 4. தூதர், 5. ஒற்றர் என்போரைக் கொண்ட ஐம்பெருங்குழுவும், 1. கரணத் தலைவர், 2. கருமகாரர், 3. கனகச்சுற்றம், 4. கடை காப்பாளர், 5. நகரமாந்தர், 6. படைத் தலைவர், 7. யானை வீரர், 8. இவுளிமறவர் என்போரைக் கொண்ட எண்பேராயம் என்ற அமைப்பும் இருந்தன. ஆயினும் இவ்விரு அமைப்புகளும் மன்னனைக் கட்டுபடுத்தும் தன்மையன அல்ல. குறுநில மன்னர;கள் ஆண்ட பகுதி களில் பொதியில் மன்றம் என்ற அமைப்புகள் செயல்பட்டன.*

**அரசாங்கத்தின் அங்கங்கள்**

*அரசாங்கமானது செயற்படுவதற்கென்று அங்கங்கள் பெற்றிருக்கின்றது. அவற்றைக் கீழ்க்காணுமாறு கௌடில்லியர் கூறுகிறார். "சாமி (அரசன்), அமர்தயா (அமைச்சர்), ஜனப்தம் (நாட்டு மக்கள்), துர்க்க (அரண்), கோசம் (கருவூலம்), தண்டம் (படை), மித்ர (நட்பு) என ஏழு அங்கங்களை உடையது அரசாங்கம்" என்கிறார். "படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகியவற்றைக் கொண்டவன் அரசருள் சிங்கம் போன்றவன்" என்கிறார் திருவள்ளுவர். "போர் வீரர்கள், உளவாளிகள், ரகசிய ஒற்றர்கள் யாவரும் அரசு முறையின் தூண்களாக விளங்கினார்[5] என அரசாங்க அங்கங்கள் பற்றிய குறிப்புத் தருகிறார; டி.டி.கோசாம்பி.*

**அரசனின் கடமை**

*ஐவகைப்பட்ட அரசர் பக்கமும் என்று தொல்காப்பியம் அரசனுக்குரிய ஐந்து தொழில்களைக் குறிப்பிடுகிறது. ஐவகைத் தொழில்களாவன ஓதல் வேட்டல் ஈட்டல், படை வழங்கல். குடியோம்பல் ஆகியனவாகும் என்று தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.*

***தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்***
***நீங்கா நிலன் ஆள் பவர்க்கு[6]***

*என்று திருவள்ளுவர் அரசனின் கடமை குறித்துக் கூறுகிறார். மேலும் அவர், இறைமாட்சித் தொடங்கி இடுக்கண் அழியாமை வரை உள்ள இருபத்தைந்து அதிகாரங்களில் அரசன் குறித்து விவரிக்கிறார். அரசன் குற்றம் குறைகொண்டு இருப்பானாகில் பூமியும் அவ்வாறே இருக்கும் என மணிமேகலை அரசனுக்கு எச்சரிக்கை விடுக்கும் தொனியில் கூறுகிறது. "மதச் சம்பிரதாயங்களில் உள்ள மூடநம்பிக்கைகளைத் தன் நலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று அர்த்த சாஸ்திரம் வலியுறுத்துகிறது. அரசன் நீதிமானாக இருக்க வேண்டும் என்றுணர்த்துகிறது சிலப்பதிகாரம். உனது வெண்கொற்றக்குடை வெயிலை மறைப்பதற்கல்ல. குடிமக்களுக்கு அருள் வழங்கி காப்பதற்காகும்[7] என்கிறது புறநானூறு.*

*குடிமக்கள் போற்றும்படியாக ஆட்சி புரிய வேண்டும். அவர்களைத் தாய்ப்புலி தன்குட்டியைக்காப்பதுபோல்மக்களைக்காக்க வேண்டும். நாடிவரும்புலவர்களை ஆதரித்துக் கலை வளர்ப்பது நல்லது. சான்றோர்கள் கூறும் அறிவுரையுடன் நடப்பது சிறப்புத்தரும். இவ்வாறு வல்லண்மையுடைய, செங்கோலையுடைய ஓர் அரசனின் நாடு சுவர்க்கத்தினும் சிறப்பானதாகும் என்று அரசனது செயல்திறம் குறித்து விவரித்தும் குறிப்புணர்த்தியும்*

*செல்கின்றன சங்கஇலக்கியப் புறப்பாடல்கள் பல. எனவே, இவற்றிலிருந்து பண்டைய அரசாங்கமானது அரசனின் ஒழுக்கத்திற்கும் நீடித்த கட்டுப்பாட்டிற்குமானதாக இருப்பதைக் காணமுடிகிறது.*

**அமைச்சர்கள்**

*நாட்டின் இயக்கத்தை அல்லது சமூகத்தின் இயக்கத்தைத் தெரிந்து அதன் போக்கைத் தீர்மானிக்கும் திறன் அரசன் கொண்டிருப்பினும் அத்தீர்மானங்களை நிறுத்துவதற்கு அவனுக்கு அருந்துணையாக இருப்போர் அமைச்சர்கள். அதன் காரணமாகவே அவர்கள் "அருந்திறல் அமைச்சர்கள்" எனப்பட்டனர். "மந்திரிகள் இன்றி அரசன் எவ்விதமான ராஜ்யக் (அரசு) காரியங்களைப் பற்றியும் ஆலோசிக்கக் கூடாது" என்கிற அளவில் அமைச்சர்கள் அரசாங்கத்தில் முக்கியத்துவம் பெற்றவர்களாக வைக்கப்பட்டுள்ளனர்.*

*அமைச்சர் தொடக்கக் காலத்தில் அரசனின் நண்பர்களாகவும், உறவினர்களாகவும், உடன் செல்பவர்களாகவும் இருந்திருக்கலாம். ஆனால், அவர்கள் அரசனின் நம்பிக்கைக்கு உகந்தோர் என்பதில் வேறு கருத்து இருக்க முடியாது. அமைச்சர் பற்றி,*

***அந்தணாளர்க்கு அரசு வரவு இன்றே***[8]

*என்கிறார் தொல்காப்பியர்.*

*அமைச்சர் நிலையும் சேனாபதி நிலையும் பெற்ற அந்தணரர்களுக்கு அரசர் தன்மையும் நீக்கப்படாது. அஃதாவது மந்திரி புரோகிதனாகிய வழிக்கொடியும் குடையும், கவரியும் தாரும் முதலாயின் அரசரால் பெற்று அவரோடு தன்மையராகி இருத்தல் என்கிறார் இளம்பூரணர். இவ்வாறு கூறப்படும் அமைச்சர்கள் குறித்தும் அவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் அரசு மற்றும் அரசனுக்கும் உள்ள தொடர்பினைக் கண்டுணர்வது இங்குப் பொருத்தமாக இருக்கும். அமைச்சர்கள் ஐம்பெருங்குழுவிலும் எண்பேராயத்திலும் இருந்தனர் என்கின்றனர். அமைச்சனை உழை இருந்தான்[9] என்கிறார் வள்ளுவர். இந்த அமைச்சரின் குணவியல்புகள் பற்றி வள்ளுவர் கூறுவது உற்று நோக்கத்தக்கது.*

**படை**

*பண்டைக் காலத் தமிழ்ச் சமூகம் போர் நிறைந்ததாகும். அச்சமூகத்திலிருந்த ஒரு குழு மற்ற குழுவினரிடமிருந்து அல்லது ஒரு நாடு மற்ற நாட்டிடமிருந்து தங்கள் "வாழ்வாதாரங்களான ஆநிரைகளைப் பாதுகாப்பதற்கும், வாழ்வாதாரங்களைக் கவர்வதற்கும்" எத்தனிக்கின்ற தருணங்களில் பூசல்கள் நடைபெற்றிருக்கின்றன. நிலத்தை விரிவுபடுத்தும் ஆசையில், "அரசில் தன் உரிமையை நிலைநாட்ட முயல்கின்றபோது". "அரசுரிமையைக் கைப்பற்ற விரைகின்றபோது", "பிறர் தன்னை இகழ்ந்தபோது தனது ஆற்றலை மெய்ப்பிக்கும் பொருட்டு எழுகின்றபோது", "மகட்கொடை மறுத்தபோது" ஒரு குழுவைச் சேர்ந்த வீரர்கள் தங்களுக்குள்ளே தங்கள் வீரத்தை நிலைநாட்டும் முனைப்பில் ஈடுபடும்போது" போர்கள் நடைபெற்றுள்ளன. மேலும், இவை போர்ச்சூழலை உருவாக்குவதற்கான காரணங்களாகவும் இருக்கின்றன என்பது அறியப்படுகிறது.*

*இப்போர்கள் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருவது. உலகத்து இயற்கை, அஃதொன்றும் புதியதல்ல என்ற கருதுகோள்கள் மேலோங்கிச் செயற்பட்டு இருந்துள்ளன என்பதை,*

***ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்***
***புதுவதன்றிவ் வுலகத் தியற்கை***[10]

*என்னும் பாடலடிகள் தெரிவிக்கின்றன. எனவே, போர் என்பது ஓர் அரசு உருவாக்கச் சூழலில் இயல்பான ஒன்றாக இருந்திருக்கின்றது. பண்டைக் கால அரசியலில் போரை நிகழ்த்துவதற்குப் படைத் தேவை இன்றியமையாதவையாக இருந்திருக்கின்றது.*

**தொகுப்புரை**

*அரசியல் என்னும் சொல்லிற்குத் தமிழ் அகராதிகள், தமிழ் நிகண்டுகள் போன்றவை தரும் பொருள்கள் எடுத்தாளப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. அரசியல் என்பது குறித்து அகராதிகள் கூறும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. குறிப்புகளின் அடிப்படையில் சமுதாயத்தின் தோற்றம் குறித்து விளக்கப்பட்டுள்ளது. சமுதாயத் தோற்றத்தின் பரிணாம வளர்ச்சியில் உடைமைச் சிந்தனையின் தலையெடுப்புப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அரசாங்கத்தில் அங்கங்களாக இருக்கும் அரசன், அமைச்சன், மக்கள் தொகுதி. படை, அரண், பொருளியல் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அங்கங்கள் குறித்துத் தொல்காப்பியம், சங்க இலக்கியம், ஆள்வோர் பகைவர்களாக நினைத்தவர்களிடமிருந்து தன் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள முனைகின்ற முயற்சிகளும், அதேபோல ஆள்வோரை வீழ்த்துவதற்காக மற்றொரு சாரார் எடுக்கின்ற முயற்சிகளும் அரசியற்பாற்படும் என்று கூறப்படுகிறது. மன்னன் செங்கோல் வளையாது ஆட்சி புரிந்ததால் நீதி நிலைபெறும், மழை பொழியும், கோள்கள் நிலை திரியாது மக்கள் நலமுறுவர் என்ற நம்பிக்கை பண்டைத்தமிழர்களிடம் வெகுவாக இருந்துள்ளன.*

**சான்றெண் விளக்கம்**

1. *அப்துல் ரகுமான், கம்பனின் அரசியல் கோட்பாடு, ப. 12.*
2. *மேலது, ப. 42.*
3. *ச.குருசாமி, சங்ககால போர் அரசியல் நெறிமுறைகள், முனைவர் பட்ட ஆய்வேடு, ப.31.*
4. *வெ.சாமிநாத சர்மா, புராண இதிகாசங்களில் அரசியல், ப. 110.*
5. *அப்துல் ரகுமான், கம்பனின் அரசியல் கோட்பாடு, ப. 13.*
6. *டி.டி.கோசாம்பி, பண்டைய இந்தியா, ப. 58.73*
7. *புறம். 35:19-21.*
8. *தொல்.பொருள். நூ. 1574.*
9. *திருக்குறள். 638, மு.வ.உரை.*
10. *புறம். பா. 76:1-2.*

**துணைநூற்பட்டியல்**


1. *பாலசுப்பிரமணியன், கு. வெ. (உ.ஆ.), புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2017.*
2. *இளங்குமரனார். திருக்குறள் வாழ்வியல் உரை, வள்ளலார் பதிப்பகம், 2017*
3. *சாமிநாதையர், உ.வே. புறநானூறுமூலமும் பழைய உரையும், டாக்டர் உ.வே. சாமிநாதையர், நூல் நிலையம், 1971.*
4. *சிவலிங்கனார், ஆ. தொல்காப்பிய உரைவளம், பொருளதிகாரம், புறத்திணையியல் பகுதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1996.*
5. *சுப்புசெட்டியார், ந. தமிழ் இலக்கியங்களில் அறம், நீதி, முறை. ஐந்திணைப் பதிப்பகம், 1988.*

**References**

1. Balasubramanian, K. V. *Purananuru*. New Century Book House, 2017.
2. Ilangumaranar. *Tirukkural: A Life-Based Commentary*. Vallalar Publishing House, 2017.
3. Saminathaiyar, U. V. *Purananuru: Original Text and Ancient Commentary*. Dr. U.V. Saminathaiyar Book Depot, 1971.
4. Sivalinganar, A. *Tolkkappiya: Text Resource*. International Institute of Tamil Studies, 1996.
5. SubbuChettiar, N. *Dharma, Justice, and Ethics in Tamil Literature*. Ainthinai Publications, 1988.